(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 26.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 ஒக்தோபர் 21 வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2590/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் பெரும்பாலான பஸ் டிப்போ தளங்களின் நிலைமை மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

(ii) இந்த நிலைமையானது பிரயாணிகளுக்கு வினைத்திறன்மிக்க போக்குவரத்துச் சேவையினை வழங்குவதற்கும் ஊழியர்களின் நலனோம்பல் நடவடிக்கைகளுக்கும் தடையாக அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் டிப்போ தளங்களை நவீனமயப்படுத்துவதற்கான கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இவ்வாறு நவீனமயப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஒவ்வொரு டிப்போவினதும் பெயர், அது உள்ளடங்கும் பிரதேசத்தின் பெயர், மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித் தொகை, பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் காலகட்டம் ஆகியவை வெவ்வேறாக யாவை;

(iii) பஸ் டிப்போ தளங்களை நவீனமயப்படுத்துவதற்கான கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படமாட்டாதெனின், அதற்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

2604/2022

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடன் பெறும் எல்லைகள்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டியுள்ள தவணைக் கடன் மற்றும் வட்டி;

(iii) 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடன் பெறும் எல்லைகள்;

(iv) 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டியுள்ள தவணைக் கடன் மற்றும் வட்டி;

ஒவ்வொரு வருடத்திற்கமைவாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) செலுத்த வேண்டியுள்ள கடன் தொகையை விஞ்சி, கடன் எல்லைகளை அங்கீகரிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

2624/2022

கௌரவ டீ. வீரசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “1000 தேசிய பாடசாலைகள் திட்டத்தின்” கீழ் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) எஞ்சிய தேசிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) தற்போதுள்ள தேசிய பாடசாலைகளுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளிட்ட ஏனைய வசதிகள் மேற்படி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளுக்கு வழங்கப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி திட்டம் நிறைவு செய்யப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(v) ஆசிரியர் பற்றாக்குறை தீவிரமாக நிலவும் பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2632/2022

கௌரவ சம்பத் அதுகோரல,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டுமானங்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் அகற்றப்பட்டுள்ள சட்ட விரோத கட்டுமானங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா;

(iv) ஆமெனில், இவ்வாறு வழங்கப்பட்டுள்ள காணிகளின் எண்ணிக்கை யாது;

(v) மேற்படி காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

2642/2022

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லக் சதொச நிறுவனத்தின் கிளை வலையமைப்பை வீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) தற்போது இந்நிறுவனம் கொண்டுள்ள கிளைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுகர்வோர் தட்டுப்பாடின்றி பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அரிசி, பருப்பு, சீனி, செத்தல் மிளகாய், கோழி இறைச்சி, முட்டை மற்றும் கோதுமை மா முதலிய பொருட்களை தற்போது சந்தையில் காணப்படும் விலையை விட குறைவான விலைக்கு பெற்றுக்கொடுக்கக்கூடிய சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், இவ்விடயம் தொடர்பில் தற்போதுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

2645/2022

கௌரவ காமினி வலேபொட,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2021ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட இரசாயன பசளைக்கான தடை காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு கணக்கிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நெல், தேயிலை, இறப்பர், கறுவா, தென்னை மற்றும் காய்கறிகள் போன்ற ஒவ்வொரு பயிர் வகையினதும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி தனித் தனியே யாதென்பதையும்;

(iii) இரசாயனப் பசளையை தடை செய்ததன் காரணமாக விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளிலிருந்து விலகி உள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

2651/2022

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கம்பெனிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கம்பெனியும் அமைந்துள்ள இடம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) சபைக்குச் சொந்தமான சுற்றுலா விடுமுறை விடுதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2661/2022

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்காக இன்றளவில் முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்பில் மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) புதிய அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்வதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2689/2022

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளையும் தனியார்மயமாக்கப்பட்டிருந்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தையும் அப்போதைய அப்பலோ வைத்தியசாலையையும் மீண்டும் அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்குமாறு உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் இவற்றுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக 2016.08.23 ஆம் திகதி என்னால் வாய்மூல விடைக்கான வினாவொன்று கேட்கப்பட்டதென்பதையும்;

(ii) கடந்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாத காரணத்தினால் சட்டமா அதிபர் திணைக்களம் அது தொடர்பில் சீ.ஆர்.ஐ/159/2016 எனும் இலக்கத்தின் கீழ் மீண்டும் கோப்பு ஒன்றினை ஆரம்பித்து 55 நபர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதோடு இன்னும் சிலரிடம் வாக்குமூலங்களைப் பதிவுசெய்த பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக மேற்படி வினாவிற்கு பதில் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) அதன் பிரகாரம், விசாரணை நடவடிக்கைகள் நிறைவடைந்து தகவல் பதிவேட்டிலிருந்து எடுபகுதிகள் கிடைத்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென சட்டமா அதிபர் அறிவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாறாயின், அதன் பின்னர் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2725/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "பெட்டிகலோ கெம்பஸ் (பிரைவெட்) லிமிடெட்" என்ற பெயரில் நிறுவனமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி பெயரில் பல்கலைக்கழகமொன்று பேணப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iii) இப்பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iv) இப்பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் பாடநெறிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்கு நிதி பெறப்பட்ட முறை யாதென்பதையும்;

(ii) இப்பல்கலைக்கழகத்தைப் பேணிவருவதற்காக நிதி பெற்றுக்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒரு மாணவரிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உண்ணாட்டரசிறை (திருத்தம்),— 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளிலிருந்தும் 2022 ஒக்தோபர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் ஏற்பாடுகளிலிருந்தும் விலக்குப்பெறுமாக.

3.

கௌரவ காமினி வலேபொட,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை வரைதல் தொழினுட்பவியலாளர்கள் நிறுவகத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2022 ஒக்தோபர் 20) [1].

*2.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

அபாயகரமான விலங்குகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9

புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10

கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான சட்டத்தின் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழ், பெறுமதி சேர் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 மே 31 ஆம் திகதிய 2282/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22(1) ஆம் பிரிவின் கீழ் போத்தலில் இடப்பட்ட கள்ளின் மீதான மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 29 ஆம் திகதிய 2277/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 03/2022)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 32 ஆம் பிரிவின் கீழ் எத்தைல் மதுசாரத்திற்கான மதுவரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 யூன் 08 ஆம் திகதிய 2283/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2022)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் புறப்படுகை அறவீடு தொடர்பில், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 மார்ச் 27 ஆம் திகதிய 2272/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் 2021 யூன் 30 ஆம் திகதிய 2234/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2022 செப்டெம்பர் 08 ஆம் திகதிய 2296/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 நவம்பர் 24 ஆம் திகதிய 2255/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*20.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 64(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2266/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*21.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 25 ஆம் திகதிய 2277/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*22.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 மார்ச் 31 ஆம் திகதிய 2273/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*23

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 94 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 12 ஆம் திகதிய 2288/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டதும் 2022.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

24.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.
மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.
சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.
சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.
இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.
அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.
ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.
சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.
கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37
இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.
இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.
சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.
தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.
சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
ரதன திஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.
இந்திரா புற்றுநோய் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] ‘‘சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக’’ எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.